# வரலாறு

## இராசரட்டை நாகரிகம்
## (பொலநறுவையின் இறுதிக் காலம் வரை)



தேர்ச்சி :- 5.0 இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் தொடர்பான விளக்கம்

தேர்ச்சி மட்டம் 5.3 :- இராசரட்டை நாகரிகத்தின் அடிப்படை பலவீனப்பட்டமையால் அதன் சீர்குலைவும், வீழ்ச்சியும் ஏற்பட்ட விதத்தை எடுத்துக் காட்டுவார்

இராஜரட்டை நாகரிகத்தின் தளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் ஏதுவான பிரதான காரணிகள் எவை?

- ♣ இலங்கை ஆரம்பகாலம் முதல் ருஹுணு, பிஹிட்டி, மாயா என்றவாறு மூன்று உபதேசங்களாக வகுக்கப்பட்டிருந்தது. இப் பிரதேசங்களில் பிஹிட்டிரட்ட பிரதேசம் அரசரின் மத்திய நிலையமாக இருந்தமையால் அப்பகுதி ரஜரட்டை என அழைக்கப்பட்டது. இவ் இராஜரட்டை பிரதேசத்தின் முக்கிய தலைநகரங்களாக அனுராதபுரம், பொலநறுவை என்பன விளங்கின. இவ் இரு நகரங்களும் நீண்டகாலம் நிலைத்திருந்த இராசதானிகளாக குறிப்பிடப்படுகின்றன. இவ் இராசதானிகள் தமது காலப்பகுதிகளில் சிறப்பாக எழுச்சியடைந்து காணப்பட்டன. எழுச்சியடையும் எந்தவொரு விடயமும் வீழ்ச்சியை தழுவிக் கொள்வது நியதி என்ற அடிப்படையில் இராசரட்டை நாகரிகம் கி.பி 13ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியைத் தழுவிக் கொண்டது.

- ♣ அவ்வகையில் இவ் இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் பற்றி நோக்கின் வரலாற்றாசிரியர்களிடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவ் வகையில் இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் என்ற வகையில் பல காரணங்கள் பின்னணியாக அமைகின்றன.



தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- அனுராதபுர இரசதானி பற்றி நோக்குமிடத்து இலங்கையின் வரலாற்றின் நீண்டகாலம் நிலைத்திருந்த இரசதானியாக அனுராதபுர இரசதானி காணப்பட்டது. பண்டுகாபயனால் தலை நகராக்கப்பட்ட இவ் இராசதானியானது பின்வந்த பல மன்னர்களால் சிறப்பாக எழுச்சியடையச் செய்யப்பட்டது. இம் மன்னர்களால் சிறந்த முறையில் எழுச்சி செய்யப்பட்ட இரசதானியானது 5ம் மகிந்தனின் ஆட்சிக்காலத்துடன் வீழ்ச்சியடைந்து கொண்டது. இவ் வீழ்ச்சிக்கான காரணங்கள் பற்றி நோக்கின் பலவீனமான மன்னர்கள் ஆட்சிக்கு வந்தமை ஓர் காரணமாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அவ் வகையில் அனுராதபுர இராச்சியத்தின் இறுதி அரைப்பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசர்கள் சிலர் பலவீனமானவர்களாக காணப்பட்டனர். குறிப்பாக 5ம் சேன, 5ம் மகிந்த எனும் அரசர்கள் பலவீனமானவர்களாக காணப்பட்டதோடு நிர்வாக திறமை அற்றவர்களாக காணப்பட்டனர். இவ்வாறு பலவீனமான மன்னர்கள் ஆட்சிக்கு வந்தமையால் அவர்களால் இராசதானியை நீண்டகாலம் நிலைத்திருக்கச் செய்ய முடியவில்லை இதனால் இரசதானி சரிவடையத் தொடங்கியது.

- மேலும் 4ம் மகிந்தனின் பின்னர் ஆட்சிக்கு வந்த 5ம் சேனன் மிகவும் பலவீனமான ஆட்சியானனவான். இவன் சேனன் எனும் படைத்தளபதியின் கட்டுப்பாட்டுக்கு உள்ளாகி அரசனாகும் போது 12 வயது நிரம்பிய சிறுவனாக இருந்தான். 10 ஆண்டுகள் ஆட்சி செய்த இவன் இறுதியில் மதுவுக்கு அடிமையாகி அரசியலைக் கவனிக்கவில்லை. இவனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த 5ம் மகிந்தன் வயது குறைந்த பலவீன ஆட்சியாளனாக காணப்பட்டான். இவனும் சேனன் எனும் படைத்தலைவனின் கைப்பொம்மையாகவே இருந்தான். இதனைப் பயன்படுத்தி பொது மக்கள் வரி கொடாது இருந்தனர். இத்தகைய நிலைமை இரசதானி வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.

- இவை தவிர 5ம் மகிந்தனின் காலத்தில் இலங்கையில் நிலவிய பலவீனமான ஆட்சியைப் பயன்படுத்திய சோழன் 1ம் இராஜராஜன் இலங்கை மீது படையெடுத்தான். இச் சமயம் 5ம் மகிந்தன் அவர்களை எதிர்க்க திறமையற்றவனாக காணப்பட்டான். இந்நிலைமை இராச்சியம் வீழ்ச்சியடையக் காரணமானது.



தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- அரச குலத்தவரிடையே அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக மௌரிய இலம்பகர்ணமானவர்ம வம்சத்தவர்களிடையயே மோதல்கள் ஏற்பட்டன. அரசைப் பொறும் பொருட்டு அவர்களிடையே கடும் சண்டைகள் ஏற்பட்டன. இவற்றிற்கு இந்திய கூலிப்படைகளும் பயன்படுத்தப்பட்டன. தாதுசேனன் முதல் மானவர்மன் வரையான 225 ஆண்டு காலப்பகுதி மௌரிய, இலம்பகர்ணமானவர்ம வம்சத்திடையே அரசு உரிமை பெறுவதற்கு பெரும் சண்டைகள் நடைபெற்ற காலப்பகுதியாகும். இந்தச் சண்டையின் விளைவாக ஒரே பிரிவினர் தொடர்ந்து ஆட்சி செய்ய முடியாது போனது. இக் காலத்ததின் இறுதியில் தென்னிந்தியக் கூலிப்படையினரின் துணையுடன் நடாத்தப்பட்ட போர்கள் பலவாகும். இதனால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் தென்னிந்தியரின் தாக்கம் அதிகரித்து நாட்டின் அரசியல் ஒற்றுமை சீர் குலைந்தது. இந்நிலையில் இராசதானி வீழ்ச்சியை நோக்கி நகர்ந்தது.

- மேலும் பாண்டியர், சோழர் போன்ற தென்னிந்திய அரசர்களின் ஆக்கிரமிப்பும் இரசதானி வீழ்ச்சிக்கு காரணமாகியது.1ம் சேனமன்னனின் ஆட்சிக்காலத்தில் பாண்டியர் இலங்கை மீது படையெடுத்தனர். சேனன் ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தனது சகோதரனான இளவரசன் மகிந்துனுடன் பெரும் படையை அனுப்பிய பொழுதிலும் சிங்களப்படையினரிடையே ஒற்றுமை இன்மை காணப்பட்டது. இதனை சாதகமாகப் பயன்படுத்திய தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்கள் இலங்கையின் வடபகுதியை கைப்பற்றிக் கொண்டனர். இந் நிலையில் 1ம் சேனனின் சகோதரன் காசியப்பன் பாண்டியருக்கு எதிராக அனுராதபுரத்திற்கு அண்மையில் சண்டை செய்து தோல்வியடைந்து பின்வாங்கினார். இந்நிலைமைகளை சாதகமாகப் பயன்படுத்திய பாண்டியர்கள் அனுராதபுரத்தை அடைந்து அரச திறைசேரியையும், நகரின் செல்வத்தையும், விகாரைகளுக்குச் சொந்தமான சொத்துக்களையும் சூறையாடின. இச் செயற்பாட்டால் அனுராதபுர இரசதானி தளர்ச்சியடையத் தொடங்கியது.

- தென்னிந்திய ஆக்கிரமிப்புக்களாலும், சிங்கள மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து படை யுதவி பெற்றமையாலும் இலங்கையில் திரவிடர்களின் பலம் அதிகரித்துச் சென்று இராச்சியம் வீழ்ச்சியடைய வித்திட்டது. சான்றாக இளநாக மன்னன் இலம்பகர்ண வம்சத்தவர்களிடம் இருந்து தப்பி தென்னிந்தியாவுக்குச் சென்று படையுதவி பெற்று வந்து இலம்பகர்ணர்களைத் தோற்கடித்து தனது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொண்டான். இதே போன்று காசியப்ப மன்னனுக்குப் பயந்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்ற முகலானன் இளவரசன் அங்கிருந்து படைகளைக் கூட்டி வந்து தனக்குரிய அரசை மீட்டுக் கொண்டான்.

தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

♣ இவை தவிர தென்னிந்திய அரசர்கள் தமது பதவியைப் பாதுகாத்துக் கொள்ள எமது மன்னர்களின் உதவியைபக் கோரினர். குறிப்பாக பாண்டிய மன்னனான ஸ்ரீமாற ஸ்ரீ வில்லபனின் மகன் தனது தந்தைக்கு எதிராக படை உதவி கோரி இலங்கைக்கு வந்தபோது இரண்டாம் சேன மன்னன் குத்திக சேனதிபதியின் தலைமையில் பாண்டிய நாட்டுக்கு படையை அனுப்பி இரண்டாம் வரகுணவர்மனை சிம்மாசனத்தில் அமரச் செய்தான். இதே போன்று சோழருடன் நடந்த போரில் தோல்வியுற்ற மாறவர்மன் எனும் பாண்டிய மன்னன் தனது ஆபரணங்களுடன் இலங்கைக்கு வந்து நான்காம் தப்புல மன்னனிடம் உதவி கோரினான். படையுதவி கிடைக்காமையால் தமது அரச அணிகலன்களை இங்கே வைத்துவிட்டு சேர நாட்டுக்குச் சென்றான். இவ்வாறு தென்னிந்திய அரசர்களுடன் கொண்டிருந்த பல்வேறு தொடர்புகள் இரசதானியின் வீழ்ச்சிக்கு காரணமாகியது.

♣ மேலும் வர்த்தகம் செய்வதற்காக வந்த தென்னிந்தியர்கள் இலங்கையில் காணப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிம்மாசனத்தை கைப்பற்றிக் கொண்டனர். பலவீனமான அரசர்கள் இருந்தமையாலும் நாட்டின் பாதுகாப்பு பலவீனமுற்றது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியவர்கள் ஆட்சிப் பீடத்தை ஆக்கிரமித்துக் கொண்டனர். சான்றாக மித்சேன மன்னன் காலத்தில் ஆக்கிரமிப்பை மேற்கொண்ட பண்டு, பாரிந்த, புத்த பாரிந்த, திரிதர, தாதிய, பீதிய எனும் தமிழ் தலைவர்கள் ஐவர் அதிகாரத்தை கைப்பற்றினர். இத்தகைய நிலை இராச்சியம் வீழ்ச்சியடைய காரணமாகியது.

♣ பலவீன மன்னர்கள் ஆட்சிப்பீடம் ஏறிய காரணத்தினால் அவர்கள் சிறப்பான நிர்வாகத்தை கொண்டு நடத்த முடியாதவர்களாக காணப்பட்டனர். அத்துடன் அவர்கள் நீர்ப்பாசன நடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்னெடுக்கத் தவறினர். நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட குலீனர்களுக்கு உரிய சம்பளங்களை உரிய நேரத்தில் வழங்கத் தவறினர். இதனால் குலீனர்கள் தமது வேலைகளை விட்டு விலகிக் கொண்டனர். இதனால் நீர்ப்பாசனத்துடன் இணைந்த அணைத்து செயற்பாடுகளும் ஸ்தம்பிக்கின்ற நிலைமை ஏற்பட்டது. இந்நிலைமை பொருளாதார வீழ்ச்சியை உண்டு பண்ணியது. பொருளாதாரம் வீழ்ச்சியுற்றமை இரசதானி வீழ்ச்சிக்கு காரணமாகியது. மேலும் மன்னர்கள் அடிக்கடி தேவையற்ற போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு தனது செல்வங்களை இழந்தனர். இதனால் பொருளாதார ரீதியில் பின்னடைந்து கொண்டிருந்த அனுராதபுரம் பலவீனமான மன்னர்களால் வீழ்ச்சியுற செய்யப்பட்டது. பலவீனமான மன்னர்கள் தமது செல்வங்களை மது, மாது போன்றவற்றுக்கு செலவிட்டமையால் அரச திறைசேரி வற்றி பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து இரசதானி வீழ்ச்சியுற்றது.

தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- இவை தவிர அனுராதபுர இரசதானியின் வீழ்ச்சிக்கான உடனடிக் காரணமாக சொல்லப்படுவது சோழர் படையெடுப்பாகும்.கி.பி 992ல் 1ம் இராஜராஜசோழன் இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். இக்காலகட்டத்தில் உள்நாட்டுக் குழப்பங் காரணமாக ஐந்தாம் மஹிந்தன் அனுராதபுரத்தை சோழர்கள் தமதாக்கிக் கொண்டனர். சீரழிந்து போயிருந்த அனுராதபுரத்தைக் கைவிட்டு பொலநறுவையைத் தமது தலைநகராகத் தெரிவு செய்தனர். நாட்டின் அரசியல் தலைமைப் பீடமாக 14 நூற்றாண்டுகளாகத் திகழ்ந்த அனுராதபுரம் சோழர் படையெடுப்பால் முற்றுமுழுதாக கைவிடப்பட்டது.

- அனுராதபுர வீழ்ச்சியைத் தொடர்ந்து பொலநறுவை இலங்கையின் தலைநகராக விளங்கியது. 1ம் விஜயபாகு, 1ம் பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன் ஆகியோரால் எழுச்சியடையச் செய்யப்பட்ட பொலநறுவை இரசதானி பலவீனமான மன்னராட்சி, பொருளாதார வீழ்ச்சி, கலிங்க பாண்டிய வம்சங்களுக்கிடையிலான சிம்மாசன உரிமைப் போராட்டம், தொற்றுநோய்கள் பரவியமை போன்ற காரணங்களுடன் உடனடிக்காரணமான கலிங்க மாகனின் படையெடுப்புடன் அரசியல் வானில் இருந்து மங்கி மறைந்தது.

- அவ்வகையில் பொலநறுவை வீழ்ச்சிக்கான ஒரு காரணமாக பலவீனமான மன்னராட்சி குறிப்பிடப்படுகின்றது. 1ம் பராக்கிரமபாகு மன்னனின் மரணத்தின் பின் கி.பி1186 ஆம் ஆண்டிலிருந்து பொலநறுவை வீழ்ச்சியடைந்த கி.பி 1215 ஆம் ஆண்டு வரையிலான 29 வருட காலப் பகுதியில் 12 ஆட்சியாளர்கள் பதவி வகித்துள்ளனர். அவர்களுள் நிஸங்கமல்ல மன்னனின் 9 ஆண்டு கால ஆட்சி தவிர்ந்த ஏனைய ஆட்சியாளர்களின் காலப்பகுதி மிகக் குறுகியதாகும். இவ் ஆட்சியாளர்களால் அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேண முடியவில்லை. இந்நிலைமை பொலநறுவை வீழ்ச்சிக்கு காரணமானது.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- கலிங்க பாண்டிய வம்சங்களுக்கிடையே ஏற்பட்ட சிம்மாசன உரிமைப் போராட்டமும் பொலநறுவை வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது. 1ம் விஜயபாகு மன்னனின் மறைவை அடுத்து இலங்கையிலிருந்த கலிங்க வம்சத்தவர்களுக்கும், பாண்டிய வம்சத்தவர்களுக்கும் இடையில் அதிகாரப் போராட்டம் உக்கிரமடைந்தது. கலிங்க வம்ச ஆதரவாளர்கள் அந்த வம்சத்தவர்களை ஆட்சி பீடமேற்ற முயற்சித்தனர். நிசங்கமல்ல மன்னனின் மறைவையடுத்து அவனது சகோதரியின் மகனும் சோடகங்கனின் சகோதரனுமான சாகசமல்லன் மற்றும் நிஸங்க மல்லனின் மனைவியான கல்யாணவதி என்பவர்கள் இடையிடையே ஆட்சிப் பீடமேற்றினர். இந்நிலைமை பொலநறுவை வீழ்ச்சிக்கு காரணமாகியது.

- பலவீனமான மன்னர்கள் ஆட்சிப்பீடம் ஏறிய காரணத்தினால் அவர்களால் நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியவில்லை. மத்திய நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க முடியவில்லை. மத்திய நிர்வாகம் சீர்குலைந்த காரணத்தினால் மத்திய நிர்வாகத்துடன் இணைந்த ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் பாதிக்கத் தொடங்கின. குறிப்பாக நீர்ப்பாசனக் கட்டமைப்புடன் இணைந்த அனைந்தும் கவனிப்பாரின்றி சீரழிந்து போனது. அரசர்கள் இந் நீர்ப்பாசனத்துடன் இணைந்த விவசாய பொருளதாரம் வீழ்ச்சியுற்று இரசதானி வீழ்ச்சிக்கே வழி கோலியது. இது மட்டுமன்றி கவனியாது விடப்பட்ட குளங்களிலிருந்து நுளம்புகள் பெருகி மக்களுக்கு மலேரியா போன்ற கொடிய நோய்கள் பரவின. இதனால் இராசரட்டை மக்கள் பொலநறுவையைக் கைவிட்டு பாதுகாப்புக் கருதி வேறு இடங்களுக்குச் செல்ல முற்பட்டனர். இந்நிலை பொலநறுவை வீழ்ச்சிக்கு காரணமாகியது.

- பொலநறுவை வீழ்ச்சியை துரிதப்படுத்திய உடனடிக்காரணியாகக் குறிப்பிடப்படுவது கலிங்க மன்னனின் படையெடுப்பாகும். மாகன் எனப்படும் கொடிய ஆக்கிரமிப்பாளன் கி.பி 1215 ம் ஆண்டு 24000 படை வீரர்களுடன் படையெடுத்து வந்து பல்வேறு அழிவுகளை ஏற்படுத்தினான். பொலநறுவையில் இருந்து சிங்கள மக்கள், பிக்குகள், சிறுவர்கள் என்போரை அடித்து துன்புறுத்தினான். அது மட்டுமன்றி பௌத்த விகாரை-களை அடித்து நொருக்கி அங்கிருந்த செல்வங்களை சூறையாடினார்கள். அத்துடன் நீர்ப்பாசன அமைப்புடன் தொடர்புடைய குளங்கள், கால்வாய்களை அழித்து சேதமாக்கியதுடன் குலீனர்களை அடித்த துன்புறுத்தி சேர்த்து வைத்திருக்கும் செல்வங்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரினர். இவ்வாறு இவனது அழிவு நாச வேலைகளை மகாவம்சம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.


தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

♣ “ ஆக்கிரமிப்பாளர்கள் மக்களைக் கட்டி வைத்து வதைத்து அவர்களது செல்வங்களைச் சூறையாடி அம் மக்களை ஏழைகளாக்கினார். புத்தர் சிலைகளை உடைத் தெறிந்தனர். விகாரைச் சொத்துக்களை கொள்ளையடித்தனர். பக்தர்களைத் தாக்கினர். சிறுவர்களையும் அடித்து துன்புறுத்தினர்.”

♣ இவ்வாறு மாகனின் படைகள் செய்த அழிவு நாச வேலைகளால் இராசரட்டை மக்களின் வாழ்க்கைக்கும் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு இல்லாமல் போனது. இவனது தொல்லைகளுக்குள்ளான பௌத்த பிக்குகளும், பொது மக்களுக்கும் பாதுகாப்புக் கருதி உருகுணரட்டை எனும் தென்பகுதிக்கும், மாயரட்டை எனும் மேற்குப் பகுதிக்கும் புலம் பெயர்ந்தனர். இதனால் இராசரட்டையின் பல பகுதிகளும் சனங்கள் அற்ற பகுதிகளாக மாறின. இந் நிலையில் இராச்சியத்தின் வீழ்ச்சி விரைவுபடுத்தப்பட்டது.

♣ எனவே மேற்கூறப்பட்ட விடயங்களை தொகுத்து நோக்கும் போது நீர்வள நாகரிகம் எனப்படும் இராசரட்டை நாகரிகமானது பொதுவாக எதிரிகளின் ஆக்கிரமிப்பு, பலவீனமான மன்னராட்சி மத்திய நிர்வாகம் சீர் குலைந்ததமை போன்ற நீண்ட காலக் காரணிகளுடன் சோழரது படையெடுப்பு கலிங்க மாகனின் படையெடுப்பு என்ற உடனடிக் காரணங்களால் வீழ்ச்சியுற்று அரசியல் வானிலிருந்து மங்கி மறைந்தது.






Copyright © www.e-thaksalawa.moe.gov.lk